உ

சிவமயம்

# பள்ளியகரப் பழங்கதை

[மூலமும் பழையவுரையும்]

நூலாசிரியர்:

மெய்யறியா முனிவர்

உரையாசிரியர்:

கயவமா முனிவர்

தஞ்சை:

கூட்டுறவுப் பதிப்பகம், கருந்திட்டைக்குடி

1938

GF
923:38 pl
G8

உ

சிவமயம்

# பள்ளியகரப் பழங்கதை*

## (மூலமும் பழையவுரையும்)

நூலாசிரியர்—மெய்யறியா முனிவர்

உரையாசிரியர்—கயவமா முனிவர்

## நூலின் வரலாறு

இவ்வருள் நூல், மெய்யறியா முனிவர் என்னும் பெரியாரால் முதலூழியின் முதலிலே யாக்கப்பட்டதாகக் கூறுவர். இந்நூல், முதன்முதலாக, நான்முகன், மால், இந்திரன் முதலியோர் மறைந்துநின்ற ஊழியின் முடிவிலே சிவபெருமான் தனித்து யாழ்வாசித்து இன்புற்றிருக்குங்கால் அவ் யாழொலியில் பிறந்த தெனக் கூறுவாருமுளர். இது பல்வகைப் பாக்களாலமைந்து எண்பத்திரண்டு நூறாயிரத் தெழுநூற்றுத் தொண்ணூற்று நான்கு செய்யுட்களையுடையது எனவுங் கூறுவர். இதுபோது நமக்குக் கிடைத்துள்ள பிரதியொன்றில் காணப்பெறுவன நூற்றெண்பத்து நான்கு முழுச்செய்யுட்களும், பலசெய்யுட்களின் அடிகளும், தொடர்களுமேயாம்.

இவ்வருணூலுக்குக் கயவமாமுனிவர் என்னும் பெருந்தகையார் வகுத்துரைத்ததோர் சிற்றுரையுங் காணப்பெறுகின்றது. இச்சிற்றுரையை நோக்குங்கால் "கந்தமாபாடியம்" என்னும் பெயரோடு பேருரையொன்றுங் காணப்படுகிறது. அவ்வுரை இதுபோது கிடைக்கப் பெற்றிலேம். கிடைத்த

* இப்புராணப் பகுதிகள் இன்றைக்கு இருபது ஆண்டுகளுக்குமுன்னர் நம் சங்கத்தில், காலஞ்சென்ற கூடலூர் வித்துவான் இராமசாமி வன்னியரவர்களால் முதன்முதல் வாசிக்கப் பெற்றன. இந்தச் செய்யுட்களை அக்காலத்து ஏட்டில் படித்து மகிழ்ந்தவர்களில், இப்போது இங்கில்லாதவர்களாகிய சிங்காரவேலு முதலியார், பா. வே. மாணிக்கம் நாயக்கர், இராம. நடேசபிள்ளை முதலிய தமிழன்பர்கள் நினைவுக்கு வருகின்றனர்.

வளவில் வெளியிடல் நலமென்றெண்ணிக் கயவமாமுனிவர் சிற்றுரையோடு வெளியிடத் துணிந்தேம்.

[இனி வருவனவெல்லாம் நூலாசிரியர் உரையாசிரியர்களது கூற்றேயாம்.]

## நூல்

இந்நூலருளிய வெங்குருமரபின் மூன்றாங்குரவராகிய மெய்யறியா முனிவரென்பார், திருக்கைலாயமலையில் கல்லூரியமைத்துத் தலைமையாசிரியராகப் பலவகை நூல்களையு முரைத்துவந்த திருநந்தி தேவரது முதன் மாணாக்கரு நண்பருமாவர்.

யோகு கூடியிருக்குங்கால் தம் மெய்யினைமறந்து நிற்பாராகலின் இவரை மெய்யறியா முனிவரெனக் கூறுவர். மெய்யறியார் என்னுந் தொடருக்கெவரேனும் உண்மையறியாரென்று பொருளுரைப்பரேல் அது பெருங் குற்றமாய் அழல்வாய் நிரயத்துய்க்குமெனவறிக. இவ்வுரை வகுக்கு மியாம் இம்முனிவரது ஞான மரபில் பன்னீராயிரத் தெண்ணூற்றேழாந் தலைமுறை யெனவறிக. இது முதலிலக்கியமாதலான் இதற்கொரு இலக்கண நூலும் வேண்டாவெனவறிக. இந்நூற்குப் பொருத்தமாமிலக்கணங்களைக் கொள்ளுக; அல்லாதனவற்றைத் தள்ளுக. அகத்தியந் தொல்காப்பியம் என்பன பிற்காலத்திய விலக்கணங்களாம். அகத்தியனரிம்முனிவர் மாணாக்கருளொருவரென்பதற்குத் தக்க சான்றுகளுள்ளன. இவ்வுண்மையைச் செந்தமிழ்ப் படலம், திருமணப்படல முதலியவற்றுட் காண்க.

இனி, இந்நூலுள் முதலில் வாழ்த்துப்படலங் காணப்பெறுகின்றது. வாழ்த்துகூறி வணக்கஞ் செப்பியது எவ்விலக்கணத்ததோவெனின் இவ்விலக்கணத்ததெனக் கூறுவாம். பிற்காலத்திய திருவள்ளுவர், கடவுள் வாழ்த்தெனக்கூறி யாண்டு கடவுள் வணக்கத்தை வற்புறுத்துதலையும், ஆண்டவனிதுகாறுஞ் செய்த வருளை நினைந்து வாழ்த்துதலே முறையென்பதனையுங் கூறுக. கடவுள் எம்போலியார்பால் வணக்கமும்வேண்டான், யாம் அவன்பால் அது தவிரேம். எம்பெயர் கயவாமாமுனிவரென்பது உலகம் உணரும். "கயவென் கிளவி பெருமையுஞ் செய்யும்" என்பது விதியாகலின் யாம் பெருமையுஞ் சிறுமையுங் கலந்துள்ளேம் என்பதுதெளிக. பத்திப்பெருமையேம்! பாசச் சிறுமையேம்!.

## வாழ்த்துப் படலம்

### விநாயக வணக்கம்.

உலகமலை யொருகதையை வரைதீட்டி யொருகோடு இற்றதேனும்
பலகலையும் புணர்பள்ளி யகரநகர்ப் பழங்கதையைப் பார்மேற்றீட்ட
நிலவுதிக ழொருகோடென் பாலுளது எனக்காட்டி நேயம்பூணும்
புலவருளத் தொன்றிநிறை யானைமுகப் புத்தேள்த னடிமேற் கொள்வாம்.

### குறிப்புரை.

உலகமலைக்கும் ஒருபெருங் கதையை மலையிலெழுதிக் கொம்பிழந்த விநாயகப்பெருமான், அவ்விழவுங் கருதாது இப் புராணம் வரையயேனைய கோடுகொண்டு எழுந்தருளுகின்றான். அதனா னவனடிவணங்குவாம் என்றார். பொய்க்கதை புனைந்த வியாசனுக்குத் துணைபுரிந்தமையான் விநாயகர் கொம்பிழந்தமையைக் குறிப்பித்தது, பொய் கூறுவோரும், பொய் கூறுவோர்க்குத் துணைபுரிவோரும் கடவுளரேயெனினும் தண்டட்பெறுவது திண்ணமென்னு நீதியை புணர்த்துவதற்கென்க.

"பலகலையும் புணர்பள்ளியகரநகர்" என்றமையான் இந்நகர்வாழ்நர் கலையுங் கல்வியுந் தாமேவந்து புணர்ந்தாலன்றித் தாம் அவற்றைப் பொருட்படுத்தாப் பெருவீரர் என்பதுணர்த்துதல் பெற்றாம்.

"பார்மீது தீட்ட" என்றமையான் வரையிற்றீட்டிய மாபாரதத்தினுமிது பெரிதென்பதுணர்த்துதல் பெற்றாம். வரையின் பரப்பினும் பாரின் பரப்பு மிக விரிந்ததென்பது யாவருமறிவர்.

"நிலவு திகழ்கோடு" என்றது அக்கோட்டின் பெருமையைக்குறித்து நின்றது. ஒரு கோடிழந்த விநாயகர் ஏனைய கோடுமிழத்தற்கு முன்வருதல் இம்முனிவர்மாட்டுள்ள அருளும், பழங்கதைபாலுள்ள பரிவும் எனத் தெரியலாகும். கோடு கோடாவிருப்பின் அதனையிழக்க முன்வருதல் எளிதாகலின் "நிலவுதிகழ்" என அதன் அருமைகுறிப்பிட்டார். பொய்யெழுதிக் கோடிழந்தும் அறிவு பெறாது இன்னும் பொய்யெழுத முன்வருகின்றான் என்று பிள்ளையாரின் பிள்ளைமையை "எனும்" என்னுஞ் சொல்விளக்குவது காண்க.

உலகமெனத் தொடங்குதலே சாலச்சிறந்ததென இவ்வாசிரியரைப்பின்பற்றியே பிற்காலத்திய சேக்கிழார், கம்பர் முதலான ஆசிரியர்கள் நூன்முதலில் மங்கலமொழி வகுத்துக் கூறு

வாராயினர். உலகத்தே பல நாட்டும் பல்லுருவிற்றோன்றி யலைகின்றமையால் உலகம் அலைகதையெனவும், உலகக்கதையி னுள்ளே மலைபோன்று நிற்றலின் மலைகதையெனவும், உலக மலைவு என்னும் குற்றத்திற்கு இலக்கியமாகத் திகழ்கின்றமை யின் உலகமலைவு ஒருகதை யெனவும் பொருள் சொல்வர். “உலகமலை” என்னுந் தொடருக்கு ஓராயிரம் பொருள் விரித் துரைத்தார் கந்தமாமுனிவரென்பதனை

“உலகமலையெனுந் தொடர்க்கு ஓராயிரம் பொருள்
உண்டாக்கிவைத்த புனிதன்
கலகமலை செய்குவோன் கருத் தொருமை காட்டினேன்
கந்தமா முனிவனடிகள்”

என முயற்கோட்டுக் கயக்கொற்றனார் மொழிவதாலுமறிய லாகும். விரிப்பிற் பெருகுமென்றஞ்சி விடுத்தனம். “புத்தேள்” என்னுஞ் சொல் தம்மை வணங்காரைத் தேள் போலத் துன்புறுத்துவார் என்னும் பொருளதாய்ச் சொல்லாயிற்று. இன்றும் வாயிலிற் றேள்வரின் பிள்ளையார் கோயிலிற் றேங்கா யுடைப்பதனாலறிக.

## முருகன் வணக்கம்.

பள்ளியிது முதலகரம் பயின்றபதி யிதுவாத லுலகந்தேற
வெள்ளியதன் பெயர்காட்டி விலங்கல்விளக் கன்னதொரு வீறுகாட்டுந்
தெள்ளறிஞ ருறைவீர மாபுரியின் றிறமுலக மறியச்செப்ப
வள்ளிபுண ரருட்டருவாங் குமரவேள் வள்ளலடி வணங்கிவாழ்வாம்.

## குறிப்புரை.

ஆறுமுகப் பெருமான் முதன் முதல் பயின்ற பள்ளி இது வென சுட்டியும், அப்பள்ளியிற் பயின்றது தமிழ்மொழியே யென்பதனை “அகரம்” பயின்ற தெனச் சாரியையொடுபுணர்த் துக் கூறியும், பள்ளிபயின்ற தன் பதிப்பெயராலேயே வெளிப் படையாகக் குறிப்பித்தார். பள்ளி பயின்ற இளம்பருவந் தொட்டு வள்ளிநாச்சியாரை மணந்துகொண்ட காலம்வரை இப் பதியிலேயே இனி தமர்ந்திருந்தமையைக் குறிப்பாற் பெற வைத்தார். இதுகாலையிவணிலன்; இந்நகரத்தாரது இக்காலத் தன்மை கருதி யேகினன்போலும். முருகன் பள்ளிபயின்றான் என்னும் உயர்வு கருதியே பிறிதெவரும் பள்ளிபயிலாராயினார்.

தசராத்திர முதலிய வடநூல்களில் திருமால் பள்ளி கொண்டமையினாலேயே இப்பதி பள்ளியகரமெனப் பெயர் பெற்றதெனக் கூறலும், தென்மொழியாளரிற் சிலர்,

" இருநதி மருங்கிற் பொருநதித் தலைவன்
உலகந்தேற மாலுகந் தொரு பள்ளி
வைத்தலாற் பள்ளி யகரமென் றறிஞர்
அழைக்கு மிவ்வூரிற் றழைக்கு நற்செல்வ !;'

எனக்கூறும் பிசாசாழ்வார் வாக்கை யெடுத்துக்காட்டி இது திருமாலின் பழம்பதியெனக் கூறலும் போலியுரையென மறுக்க. எம் உரையே சாலப் பொருத்தமென்பதனைத் " திருமுருகத்துள் " முருகனார்,

எள்ளியவரோட விளையோனாய் யான்பயின்ற
பள்ளியிந்தப் பள்ளியகரம் "

என இகரச்சுட்டு கொடுத்து இனி தோதல் கண்டு கொள்க.

## சிவபெருமான்.

நறுமலர்நங் கையர்க்காகு நமக்கிதுவா மெனமத்த மலரோ டின்னும்
வெறுமலர்கள் விழையவலை மகள்கண்டு தலையேற வெள்கி நிற்குங்
கறைமிடறுங் கணிச்சினையுங் கண்மூன்று முடையவொரு கடவுள் செய்ய
மறையடியெந் தலையேற்றி மனவலைவு தீர்ந்துபெறு மாண்புற்றுய்வாம்.

## குறிப்புரை.

பெண்களுக்கிடங்கொடுத்தார் பேரிடர்ப்படுவாரென்பதனை, நறுமணமிக்கமலர்களையெலாந் தான் விழைந்தணியின் பெண்கள் அவற்றைப் பெறாரெனக் கருதி மணமில் மலர்களையே விழைவானாக, இவ்வெளிமைகண்டு அலைமகள் தலையேறிய செய்தியால் ஈண்டு அறியவைத்தார்.

இருங்கலைநாட்டு ஏகான்மவாதப் பிரதியொன்றில் காணப்பெறும் "பெருமாண்பு" என்னுந்தொடரையே மெய்யுரையெனக் கொண்டு பெரியோர் பலரும் பெரியமாண்பு எனவுரை கூறிப்பேதுற்றார். மாண்பெனப்படுவது, நீட்டல், நிறுத்தல், முகத்தன்முதலிய அளவைகளான் அளக்கப்பெறுவதென எண்ணினர்போலும்! எம்மாதீனப்பிரதியொன்றில் காணப்பெறும் "பெறுமாண்பு" என்பதனையே மெய்யுரையாக் கொள்க. மன அலைவு தீர்தலினாலே பெறுகின்றமாண்பு எனக்கூறிய கந்தமாபாடியத்தையுங் கருத்துட்கொள்க. மனவலைவு தீர்வதே வீடென்பது எம்மாதீனக் கொள்கையுமாம்,

## உமையம்மை.

கற்பகக் காவின் கோவுங் கமலநான் முகனு மாலும்
எற்பகத் திருகவேத்த வேன்றநா ளொப்ப வெங்கள்
சிற்பா ணியாவும் விட்டுச் சிறுபலிக் கேகுநாளும்
அற்பகத் தமர்ந்து வாழ்ந்த வன்னைதாள் போற்றிவாழ்வாம்,

### குறிப்புரை.

இப்பாட்டு உமையம்மையைப் போற்றுமுகத்தால், வாழ்வினுந் தாழ்வினுங் கொண்டானிடத்துப் பெண்டிர் ஆற்ற வேண்டுங் கடமையைக் குறிப்பித்ததாம். தங்கடைத் தேவரெல்லா நின்றவழி யிருந்த அன்பே யொப்ப, எம்பிரான் பிறர்கடை நின்ற வழியும் உமையம்மையின் அன்பிருந்ததெனக் கூறினர். "யாவும்விட்ட" என்றமையான் வெள்ளியம் பொருப்பும், வால்வெள்ளேறுமாம் தம்முடைமையேயன்றித் தன்னுணமும் மானமும் விட்டானென்றுங்கொள்க. என்றும் பிரியாத வுமையம்மையையும் விட்டானென்றலும் ஒன்று. அவன் தன்னை விட்டகாலத்தும் தான் அவனைவிட்டிலளென்பது கருத்து.

### நந்திதேவர்

*காளையர் தலையனுகிக் கண்ணுதல் கைலைகாக்குந்*
*தாளையந் தவத்தோர்க் கெல்லாந் தனிப்பெரும் பேற்றையிந்தப்*
*பீளைவெம் பிறவிபோக்கும் பெருந்தகை யெங்களையன்*
*தாளையெந் தலைமேலேற்றித் தவத்தவர் தலைமேல்வாழ்வாம்.*

### குறிப்புரை.

உருவுந்திருவும் இறைவற்குப் பொருட்டாவனவல்ல என்பது தோன்ற "காளையந்தலையனை" கைலைகாக்குஞ் சிறப்பிலமர்த்திய குறிப்பு இதன்பால் தோன்றுவதாகும். தாள் = முயற்சி. நந்தியம் பெருமான் தாளில் தலைபூட்டி யாரோ தவத்தவர்க்குத் தலைமையாயினர் என்பது கருத்து.

### பழைமைபாராட்டல்.

பழமைபாராட்டல் என்னும் பகுதியுள் மெய்யறியா முனிவர் தான் கைலைமலையின் பாங்கர் வாழ்ந்துவந்த செய்தியும், ஆங்கீகார் நிகழ்ச்சியும், நிகழ்ச்சியான் நீங்கலும் ஆகியவற்றை

"வையகத் துள்ளோர்தங்கள் வாயெலாந் திதிக்க வாழ்த்தி
கையகத் துருகிக் கூப்பும் கயிலைமா மலையின் பாங்கர்"

எனத் தொடங்கும் செய்யுள் முதலாக

"கார்நிற்பன மக்கள்ளுளங் கவிநிற்பன மரமேல்
நேர்நிற்பன பனையின்திரள் நெறிநிற்பன சாலை"

எனத் தொடங்கும் செய்யுளிறுதியாக இருபது செய்யுட்களுட் கூறுகின்றார். அதன் திரண்டபொருள் பனிமலைப் பாங்கர் பல்வளக்காவும் நல்வளச்செய்யும் நனியியற்றி வாழுநாள், நாயகன் நந்தியம் பெருமான் பயிர் நசையால் முனிவர் இளம்பயிர்ச்

செய் யொன்றை நணுகினனாக, முனிவர் அறியாது புடைப் பாராக, பெருமான் கோடுகொண்டுந்துவானாக, இவரவர் மருப்பினைப்பற்றுவாராக, இருவருமாய்க் கட்டிப் புரண்டு கயிலையைச் சார, ஆங்கெம் அவிர்சடைப்பெருமான் நிகழ்ந்த துணாராய் முனிவனைக்காய, முனிவர் அவனைக்காய, அக்காய்தலின் பயனாய் மக்கள் யாக்கையை முனிவரடைய, ஆண்டவன் முனிவன் சாபத்தால் மக்களுள்ளத்தையடைய நின்ற நிகழ்ச்சிகளேயாகும்.

## நாட்டுப் படலம்

மண்ணூறு பாய்ந்துவளம் பெருகாது மாநிலத்து
விண்ணூறு பாய்ந்துவளம் பெருகுதிரு வியனாடு
தண்ணூறு மதிச்சடிலத் தெம்பெருமான் றனைத்துவளர்,
எண்ணூறு பதிகளொடு வெயிற் பலவுமுடைநாடு.

### குறிப்புரை.

இதன்கண் "ஆறே யறனே யரணெனப் படுமொரு மூன்றின் றிறனுந் தோன்றக் கூறினர்" (இஃதுரைப்பாட்டு) விண்ணூறு கூறவே ஆறும், எண்ணூறுபதிகூற அறனும், எயில்கூற அரணும் பெற்றாம். மண்ணிடை நாடு எனினும் விண்ணொடு தொடர்புடைமையின் மண்ணூறுபாய்ந்து வளங் கொள்ளாதெனக் கூறினர். விண்ணொடு தொடர்புடைமை, முருகன் பள்ளிபயின்றமையானும், நம்முனிவர் பெருந்தகை இவண் பிறந்தமையானும் பெற்றாம்.

வயலெலாங் கள்ளிமுள்ளி வரப்பெலா நண்டுநத்தை
அயலெலா மள்ளர்வீடு அருகெலாம் வம்புசண்டை
கயலெலாங் கடையர்வாய கள்ளெலா மவற்றோரன்ன
புயலுலாம் பொன்னிநாட்டுப் புகழெமாலுரைக்கற்பாற்றே.

### குறிப்புரை.

வயலெலாம் நண்டுநத்தை வரப்பெலாங் கள்ளி முள்ளியென மாறுக. கயல்கடையர்வாய என்பதோருண்மை; அவற்றையுண்பாரவரேயாகலின். வம்பு சண்டையெனவே காரணமின்றியும் ஒருவரோடு ஒருவர் செருவரென்பது பெற்றாம்.

செய்யருகே வருமேதிதனைச்சினந்து செயிர்நோக்கின்
கையருகே கிடந்திடுகோற் றனைஎடுத்து வெருட்டுமவன்
பையருகே விழவதனிற் பாக்கெடுக்கு முழத்திதனை
வையருகே களைபறியாய் எனப்புகலு மோருழவன்,

குறிப்புரை.

வயலினருகே வரும் கருமேதி தனை வெருட்டும் உழவனது மடியிலிருந்த பை கீழேவிழ, அவன் திரும்புமுன் அப்பையி லிருந்த பாக்கையெடுக்கும் உழத்தியைக் கண்டு, "பையை வை அறுகு முதலிய களையைப்பறி" யென்று கூறுகின்றான். இது தன்மைநவிற்சியென் னும் அணியின்பாற்படும்.

எலிபெருச் சாளியேய்க்கு மப்பெருச் சாளிநோக்கின்
மலிவுறு பன்றியேய்க்கும் பன்றிதான் மேதிமானும்
கலிபெறு மேதிகண்டார் களிறெனப் புகன்றுநிற்பார்
புலிபெறு சோழநாட்டுப் புழைக்கைதா னியாதோவம்மா.

குறிப்புரை.

இந்நாட்டு வளங்கூறுவான் தொடங்கி, அங்குவாழ் விலங்கு களில் ஒருசார் கூறினர். பறழ்பலவுடைமையின் "மலிவுறு" எனப்பன்றிக்கடைகொடுத்தார். கொடியிலன்றி நாட்டில் புலி யில்லென்பதறிவித்தற்கு "புலிபெறு" என்றார். புலி, புழைக்கை யென்பன முறையே ஆகுபெயரான் கொடியையும், யானையையுமுணர்த்திநின்றன.

கண்டெலாங் கடையிலன்றிக் கன்னியர் மொழியிலல்ல
வண்டெலஞ் சோலையார்க்கும் வனிதையர் கண்ணினேய்க்கா
தொண்டெலாம் பத்திலொன்று குறைவதாற் பெற்றதேயாம்
பண்டெலாம்புலவர் சொன்ன பான்மைதானியாதோவம்மா.

குறிப்புரை.

தொண்டு பத்திலொன்று குறைந்த ஒன்பது. அதைப் பிற்காலத்திலக்கியமாகிய பரிபாடலில் "தொண்டென" வருவ தாலுணர்க. பெரியோர்க்குச் சிறியோர் எளின செய்யார் என்றதைக் குறிப்பித்தபடி. இதனன் ஆணவந்தலை யெடுத் தமைபெற்றும். இன் உருபுமயக்கம். கண்டுமுதலியன ஈண்டு முறை பிறழக் கிடந்தமை நோக்கற்பாற்று என்பார் "அம்மா" என்ற வியப்பிடைச்சொல் கொடுத்தோதினர்.

## வைரவோபநிடதப் படலம்

நமது முனிவர் பெருமானர், இப்படலத்து நாய்முனிவன் நன்னெறி பெற்ற வரலாறும், அவனது தீக்கைமுறையும், நல்லுரையும் எடுத்தோதுவாராயினர்.

வணங்குவார் வாழவைக்கும் வள்ளலார் செய்யபாதம்
சுணங்களுர்முன்புபூசித் தரும்பதஞ் சொற்றவாறு
கணங்களார்முனிவர் கேட்பக் கனிந்தருள் சுரந்துநந்தி
இணங்கிஞர் சொற்றவாறு மின்று நா மியம்புவாமே.

## குறிப்புரை.

மெய்யறியாமுனிவர், திருநந்திதேவரது நேர்மாணுக்கரென்பது இச்செய்யுளின் அகச்சான்றுலறிக. முனிவர் கூட்டங்கொண்டதைக் கணங்களாரா முனிவர் என்ருர்.

ஒருப்படா வுள்ளமன்ன வோடியே வுணவுநாடித்
தெருப்படா தெல்லையேகித் தெளிவிலார் தின்றவூனின்
வறுப்படா நல்லியென்பு வகைபல கடித்துப்பின்பு
வெறுப்படா வாழ்க்கையென்று வீதிவாய்நின்றவேந்து.

## குறிப்புரை.

வீடடைதற்கு உள்ளத்தின் ஒருமையே வேண்டப்படுவதெனக்குறிப்பித்து, நாய்முனிவன், நாட்டின் அலைந்து திரிந்ததை "ஒரு...........மன்ன" எனவுவமித்தார். ஓடுதலுந்தேடுதலுமே கூறிஞரன்றிப் பெற்ருனெனக் கூறிஞரில்லை. பெறுதலவனருளாகலின்; "தெருப்படாதெல்லை" என்றது கொல்லைப்புறத்தை, நாய்முனிவன் செல்லுநெறி யதுவேயாகலின், "வீதிவாய்நின்ற" என்பது முனிவனது பின்னிலையை. தன்முயற்சியான் ஒன்றும் பெருதவழி பிறரேதேனு மீவரோவென நின்றநிலையை எனவுணர்க. "வறுப்படா நல்லியென்பு" என்பது அஃதொன்றன்றிப் பிறிதெல்லாம் மக்களுட்கொண்டிருப் பாராகலின். "வெறுப்படா வாழ்க்கை" என்பது நாய்முனிவன் கூற்று, வாழ்க்கையை வெறுத்துக்கூறுகிருஞகலின். ஊர்காவல் புரிந்தொழுகின்றமையின் "வேந்து" என்ருர். காவல்புரிந்தொழுகுந்தொழில் மண்ணுலகுக்கன்றி விண்ணுலகுக்குமொக்கும் எங்ஙனமெனின் :—

[இடையே சில செய்யுட் காணப் பெற்றிலம். செல்வாய்ப் பட்டுச் சென்றன போலும்]

கூடல்குள மங்கலகற் குறுங்களூ ரென்னுமுயர்
பாடல்பெறு பதிபலவுஞ் சூழ்பள்ளி யகரநகர்
ஆடலுகத் தப்பதியி னுயிரமா மெனக்கேட்டு
நாடலுற வானெமது நாய்முனிவன் நல்வினையால்.

## குறிப்புரை.

பல்வழியலைந்து நல்வினைதூரப்ப நாய்முனிவன் அடைந்த நகரையும் அதனைச் சூழ்ந்த சிலவூரையுங் குறிப்பிட்டார். ஆடலுகந்த பதி தில்லை. அதினினாயிரமென்றது அதைவிட ஆயிர மடங்குயர்வுடையது இப்பள்ளிமாநகர் என்பது கருத்து. ஒருசில மாறுபாடுடையார், வீசம்பங்கே யுயர்ச்சியென்று கூறுவர். அதற்குச் சான்றாகவன்னார்,

> காசியில் வீசம்தில்லை யதனினும் வீசம்பள்ளி
> மாசிலா மூதூரென்று மறைமொழி போற்றிநிற்ப''

என்னும் வைரவாகமப்பகுதியைக் காட்டுவர்.

> நற்றவத்தால் நாய்முனிவன் நாடியவர் நகர்முழுதும்
> கற்றவரும் கற்றவரைக் கண்டவரும் காணாமல்
> பெற்றமுகந் தேறுமொரு பிஞ்ஞகனார்க் கிங்கில்லையோர்
> உற்றவரேல் யானுய்ய உறுதியில்லை யோவென்பான்.

**உரை**:—அந்நகர்க்கண் கோயில் கொண்டெழுந்தருளும் பெருமான்றன் றிருவுருவம் மக்கள் உருவினதாய்க் கண்ட முனிவன், அந்தோ! மக்களே வீடடைதற்குரியார்போலும் எமக்கப் பரிசில்லையோ எனக்கவலுவான் அந்நகர் மக்களைக் காணுந்தோறும் கற்றல் கேட்டலென்பன அவர்கண்ணுந் தன் மாட்டும் ஒருதன்மையவாய் நிற்றலின் தானும் வீடடைதல் துணிவெனக்கருதிப் பின்னர் ஆண்டவன் அடிகாண்பான் நோக்க, ஆண்டு கண்டான் பெற்றம்; பெற்றமுகந்தான் என்னையு முவப்பான் என இறும்பூதெய்தும்.

> பித்துடைய பெருமாற்குப் பேதையொரு துணையாயின்
> பத்துடையார் தொழமகிழும் பரம்பரனைப் பாடுவனேல்
> எத்துணையோ மகிழுமவன் எதிர்நிற்பா ரில்லையெனக்
> கத்துவதும் கண்டவரைக் கடிப்பதுமாய்க் கழிப்பான்நாள்.

**உரை**:—ஆண்டவன் பித்தன்; யானுமதுவே. பித்தற்குத் துணையோ பேதை. சூழ்ந்தார் பத்துடையார். இங்கிலையில் யான்பாடில் அவன்மகிழும் எனத்தன் இன்குரலால் ஏத்தெடுப் பான். எய்த்தவழிப் பிறரும் ஏத்தெடுக்க வேண்டி மக்களை

யணுகிப் பற்பணி செய்வான். இப்பற்பணியே பிற்காலத்துத் தந்ததீக்ஷ என வடமொழியினும் பற்கழுவாய் எனத்தென் மொழியினும் வழங்குவதாயிற்று. மந்திர இலக்கணமுணர்ந் தோர் மாசுநீக்கி வீடுபயக்கும் தீக்கைகளுள் தந்ததீக்கை விரைவுடையதெனக் கூறுவர். நந்திதேவர்

"மந்ததீக்கை மற்றுள்ள தீக்கையாற்
பந்த மோக்கப் பதம்பெறப் பாரினில்
தந்த தீக்கை தகவுடைத் தீக்கையென்
றந்தி வெண்பிறை யைய னறைந்தனன்"

எனக் கூறுவதும் ஈண்டு கருதற்பாலது.

கலியின் கொடுமை நிரம்பிய இக்காலத்தும் வயிரவ முனிவரது தந்ததீக்கை அருளப்பெற்றால் மலைச்சாரலிற் சென்று பந்தப்படுதலானும் அவ்வாறு பந்தப்பட வொருப்படார் நேரே துறக்கமெய்தலானும் மேற்செய்யுளின் உண்மை நன்குணரலாகும். முனிவர் வாக்கு முக்காலமும் நிலைநிற்குமன்றோ?

## நாய்முனிவன் நல்லுரை

**கள்ளம் அறியா வுள்ளத் துறைவே**
**வள்வெள் வள்வெள் வெள்வள் வெள்வள்**

**உரை :—** வள்வெள் என்னுந் தொடரை வள்ளெனவும் வெள்ளெனவும் பிரித்து உள்ளம் முதலிய சொற்களோடு கூட்டிப் பொருள் காண்க. வள்உள்ளம் வெள் அறியா என இவ்வாறு பன்னூறுகூட்டிப் பொருள் காண்பர். பின்னிரண்டடி நாய்முனிவனது ஒலிக்குறிப்பு. இவை மறை, பிற்காலத்துப் பரிபாட்டுள்ளும் ஏ எனுஞ் சொல் ஒலியாய் மறையெனும் பொருளதாயிற்று. நாய்முனிவன் இவ்வாறு கூறியதைக் குரைத்தலென்னுஞ் சொல்லானும் விளக்குவர். "குரையென் கிளவி மறையுமாகும்" என்றார் பிறரும். அறிவுமேம்பட்டோ மெனக்கருதி ஆராய்ச்சியெனும் பெயரால் தம்முளங்கொண்டதெல்லாம் பிதற்றும் அறிவிலிகளிற் சிலர் நாய்முனிவன் எம்பிரான் திருவருளிற் றிளைத்துக் குரைத்தானல்லன் ஆண்டவன் திருமுடியின் திங்கள் கண்டே குரைத்தானெனக் கூறுவர். அந்தோ மடமை! இதுகொள்ளற்க.

## இவ்வருள்நூல் அரங்கேறியகாலத்து சிவபெருமான் திருமுன்பு தமிழன்னை கூறியது.

*பொய்மலி புராணம் போதும்! புகழ்மலி யருணூ லொப்பக்*
*கைதவக் கயவராக்கும் கவியெலாம் போதும்! போதும்!!*
*உய்வதற் குறுதி யுண்டேல் உலகுவாழ் உயர்நூ லெல்லாம்*
*செய்கமுத் தமிழோ டான்ற அறிவுநூல் உரைநூல் செய்மின்.*

## உரையாசிரியர் கயவமாமுனிவர் கூறிய வாழ்த்து.

*போலி யொழிக புதுநூல் பலவெழுக*
*கால வுணர்ச்சி கவின்பெறுக—மேலுமினி*
*மெய்யறியான் மண்மேல் பிறவா வருள்தருக*
*வையகமெல் லாம்வாழ்க வே.*

கூட்டுறவுப் பதிப்பகம், தஞ்சாவூர்.